بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 19.12.14 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 19, December 2014 (Tamil)**

**பாகிஸ்தானில் நடந்த இந்தக் கொடுமை நிச்சயமாக நமக்கு மிகவும் துன்பத்திற்குரியதாகும். உலகில் எந்த முஸ்லிம் சார்பாகவும் கொடுமையிழைக்கும்போது அது நமது துன்பத்திற்குக் காரணமாக இருக்கிறது. அல்லாஹ் இந்தக் கொடுமைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகத்தான் தனது வாக்குறுதிக்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹை அனுப்பினான். அவர்தான் போர்களையும், கடுமைகளையும் முடிவுக்குக் கொண்டு வந்து அன்பையும் நேசத்தையும் பரப்பவிருந்தார் என நாம் உலகிற்கு அழைத்துக் கூறிக்கொண்டிருக்கும் இந்நிலையில், நமக்கு இந்த துன்பத்தைப் பற்றிய உணர்வு மேலும் அதிகமாகி விடுகிறது.**

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

மிருகத்தனம் மற்றும் கொடுமையின் எத்தனை உதாரணங்கள் அல்லது சம்பவங்கள் முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்ற நாடுகளில் காணப்படுகின்றனவோ, முஸ்லிமல்லாத மற்ற நாடுகளில் அநேகமாக வெளிப்படையில் பார்க்கும்போது இந்த அளவுக்கு அதிகமாக இல்லை என்பதை நாம் இன்று காண்கிறோம். மேலும் (முஸ்லிம் நாடுகளில்) அவ்வாறு சம்பவங்கள் நடந்து விட்டால் பொதுவாக அவற்றிற்கு எதிராக முன்னேற்றமடைந்த நாடுகளில் அல்லது முஸ்லிமல்லாத நாடுகளில் மிகவும் வலுவான முறையில் எதிர்ப்புக் குரல் எழுப்பப்படுகிறது. ஆனால் இஸ்லாம் அன்பு, நேசம், சகோதரத்துவம் பற்றிஎந்த அளவுக்கு அருமையான போதனைகளை வழங்கியுள்ளதோ அதே அளவுக்கு இன்றைய முஸ்லிம் அரசுகள், இஸ்லாத்தின் பெயரில் உருவாக்கப்பட்டுள்ள குழுக்கள், அமைப்புகள் ஆகியவை இஸ்லாத்தின் பெயரில் கொடுமைகளை இழைத்துக் கொண்டிருக்கின்றன. அதாவது இஸ்லாத்தின் போதனைகளுக்கு எதிராக செயல்படுகின்றனர். இன்று ஷரீஅத் என்ற பெயரில், அல்லது ஷரீஅத்தை நிலைநாட்டுதல் என்ற பெயரில் எண்ணற்ற தீவிரவாத கூட்டங்கள் உருவாகி விட்டன. அவர்கள் எப்படிப்பட்ட கொடுமைகளை செய்கின்றார்கள் என்றால் அவற்றைப் பார்த்து, இது மனிதன் செய்கின்றானா? அல்லது மனிதனின் உருவில் மிருகங்களை விட கேவலமானவர்கள் செய்கின்றார்களா? என்று நினைத்து மனிதன் திகைத்து நிற்கின்றன்.

கடந்த நாட்களில் பாகிஸ்தானில் கொடுமையின் ஒரு நிலை நமக்கு முன்னால் வந்தது. அது கொடுமை மட்டுமன்று; மாறாக, மிருகத்தனம், கொலைவெறி ஆகியவற்றின் மிகக் கீழ்த்தரமான உதாரணமாக இருந்தது. இந்த சம்பவத்தால் மனிதத்துவம் கதறி அழுதது. இப்படிப்பட்ட இதே மாதிரியான ஒரு கொலை வெறி இன்றிலிருந்து நான்கரை ஆண்டுகளுக்கு முன்னர் லாஹூரிலுள்ள நமது பள்ளிவாயிலிலும் நடத்தப்பட்டது. இங்குள்ள ஒரு தொலைக்காட்சி அநேகமாக **BBC TV** பாகிஸ்தானில், கடந்த சில ஆண்டுகளில் நடைபெற்ற 5 கொடுமையான கொலை வெறி சம்பவங்களை எடுத்துக் கூறியது. அதில் நமது லாஹூர் பள்ளிவாயில் பற்றியும் குறிப்பிட்டது. நமது அந்த துக்கத்தை நம் மீது செய்யப்பட்ட அந்த கொடுமையை (பாகிஸ்தான்) அரசாங்கமும் கவனத்திற் கொள்ளவில்லை; ஒருவேளை மவ்லவிகளின் அச்சத்தினால் பாகிஸ்தானின் பெரும்பான்மையான பொது மக்களும் கவனத்திற் கொள்ளவில்லை. ஆனால் **அஹ்மதிகளாகிய நாம் மனிதத்துவத்துடன் அநுதாபம் காட்டுபவர்களாக இருக்கின்றோம். மேலும் நமது உள்ளங்கள் கருணையின் உணர்வுகளால் நிறைந்து காணப்படுகிறது. பாகிஸ்தானில் கடந்த நாட்களின் நடைபெற கொடுமையினால் நாம் மிகவும் நிம்மதி இழந்துள்ளோம்.**

மேலும் இந்த சம்பவத்தில் மிருகத்தனத்தை அதன் உச்ச கட்டம் வரை சென்றடைய வைத்து விட்டனர். இந்தக் கொடுமைக்கு அதிகம் இரையானவர்கள் அப்பாவி குழந்தைகளாவர். அவர்களுக்கு அநேகமாக, தீவிரவாதம் என்றால் என்ன? தீவிரவாதமற்ற நிலை என்றால் என்ன

என்பது தெரியாது. முஸ்லிம் என்றால் யார்? முஸ்லிம் அல்லாதவர் என்றால் யார்? என்பது கூட அவர்களுக்கு தெரியாதிருக்கலாம். ஆனால் மிகவும் கொடுமையான முறையில் அவர்களின் உயிர் பறிக்கப்பட்டிருக்கிறது. **அல்லாஹ் அவர்கள் அனைவரையும் தனது மன்னிப்பு மற்றும் கருணையின் போர்வையில் போர்த்திக் கொள்வானாக. அவர்களின் பெற்றோர்களுக்கும் பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக.** ஷரீஅத்தை நிலைநாட்டுபவர்கள் என்ற இந்த பெயர் தாங்கி அமைப்பு, பாகிஸ்தானில் இராணுவத்தை பழிவாங்க வேண்டியிருந்தது. அதற்காக இந்த அப்பாவி குழந்தைகள் கொடுமைக்கு இரையாக்கப்பட்டுள்ளனர். இது என்ன இஸ்லாம்? இது என்ன ஷரீஅத்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், போரில் கூட முஸ்லிம் அல்லாத குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிராக வாளேந்துவதற்கு கடுமையாக தடை விதித்திருந்தார்கள். ஒரு யூதரின் குழந்தையைக் கொன்றது பற்றி தோழரிடம் கேள்வி கேட்டபோது அவர், அல்லாஹ்வின் தூதர் அவ்ர்களே! அவன் ஒரு யூதனின் மகன் ஆவான்; தவறுதலாக கொலையுண்டாலும் என்ன நேர்ந்து விட்டது என்றார். அப்போது நபி (ஸல்) அவர்கள், அவன் மனிதனின் அப்பாவிக் குழந்தையில்லையா? என்றார்கள். **ஆக, இதுதான் மனிதனின் கண்ணியத்தை நிலைநாட்டும் அன்னாரின் அழகிய போதனையாகும்.** ஆனால் இஸ்லாத்தின் பெயரில் இன்று நாம் பொதுவாக இந்தக் கொடுமைகளைப் பார்த்து வருகிறோம். இந்த இரத்த வெறி பிடித்த கொடுமைக்காக ஒவ்வொரு மனிதனும் துக்கத்தை வெளிப்படுத்தி இருக்கின்றார். அவர் முஸ்லிமாக இருந்தாலும் அல்லது முஸ்லிம் அல்லாதவராக இருந்தாலும் சரியே. ஆனால் முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்ற இந்தத் தாக்குதலை நடத்திய குழுவினர் ஒன்றிரண்டு அல்ல; மூன்று நான்கு குழுக்கள் ஒன்று சேர்ந்து மிகவும் பெருமையுடன், எங்களுக்கு இவ்விஷயத்தில் எந்த வெட்கமுமில்லை என அறிவித்திருக்கின்றன.

எனக்கு இந்த நிகழ்ச்சியைப் பற்றி பல கடிதங்கள் வந்தன. அதனால் நாம் நாள் முழுவதும் நிம்மதியிழந்தவர்களாகவும், துன்பத்திற்குள்ளாகியும் இருந்தோம். இதுவே உண்மை. **எனது நிலை எப்படி இருந்ததென்றால், நாள் முழுக்க மனதில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. அப்படிப்பட்ட நிலை ஏற்படும்போது கொடுமைக்காரர்களுக்காக பத் துஆ (சாபம் ஏற்படுவதற்கான துஆ) வெளிப்படுகிறது. அல்லாஹ் இந்த கொடுமைக்காரகளிடமிருந்து பாகிஸ்தானை சீக்கிரம் பாதுகாப்பானாக. இன்னும் சொல்வதென்றால், எல்லா முஸ்லிம் நாடுகளையும் பாதுகாப்பானாக.** இந்த சம்பவங்களைக் கேட்டு அஹ்மதிகளின் மீது இழைக்கப்பட்ட கொடுமைகளும் நினைவுக்கு வருகின்றன. ஆனால் இந்த அப்பாவிகளுக்காகவும் உள்ளத்தில் கடுமையான வேதனை ஏற்படுகிறது. அல்லாஹ் அந்தக் குழந்தைகளுக்கும் தைரியத்தை வழங்குவானாக; பொறுமையை வழங்குவானாக. அவர்கள் மீது கருணை புரிவானாக. அவர்களின் பெற்றோர் பறிக்கப்பட்டு விட்டனர். அல்லாஹ்வே அவர்களுக்கு பாதுகாவலனாக இருப்பானாக. தீவிரவாதம், கொடுமை ஆகிய இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏறக்குறைய முஸ்லிம் நாடுகள் என்றழைக்கப்படுகின்ற எல்லா நாடுகளிலும் நடக்கின்றன. இது பாகிஸ்தானில் நடக்கும் சம்பவம் மட்டுமன்று; ஈராக், சிரியா, லபனான் ஆகிய அனைத்து நாடுகளிலும் இந்தக் கொடுமைகள் நடக்கின்றன. இதில் மிகப் பெரிய கொடுமை என்னவெனில், இவை இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் பெயரால் நடக்கின்றன. சிரியாவில் மட்டுமே குழந்தைகள் உட்பட மூன்றுக்கு ஒன்று என்ற கணக்கில் நகர மக்கள் 6,600 பேர் கொல்லப்பட்டனர்.ISIS மூலமாக ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். தம்முடன் திருமணம் செய்து கொள்ள மறுத்ததன் காரணமாக நூற்றுக்கணக்கான பெண்களும், கன்னிப் பெண்களும் ஒரே வரிசையில் நிறுத்தி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவற்றையெல்லாம் பார்த்து விட்டு இஸ்லாத்தின் உண்மை நிலையைப் புரிபவருக்கு தலை சுற்றுகிறது. இஸ்லாத்தின் எந்த போதனையில் அடிப்படையில் இவை நடக்கின்றன என நினைத்து மனிதன் கவலைக்குள்ளாகிறான். இவையெல்லாம் கருணையாளனாகிய, பரிவு காட்டுபவனாகிய, இரக்கம் கொள்பவனாகிய அந்த இறைவனின் பெயரால் நடக்கின்றனவா? அதை கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. அனைத்துலகங்களுக்கும் அருட்கொடை என்று கூறப்பட்ட அந்த நபி (ஸல்) அவர்களின் பெயரால் நடக்கின்றதா? எதிரிகளுடன் கூட நீதியுடன் நடந்து கொள்ள வேண்டுமென்று போதித்த அந்த ஷரீஅத்தின் பெயரால் நடக்கின்றதா? அல்லாஹ் கூறுகிறான்:

‘‘நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். **ஒரு சமுதாயத்தின் பகைமை உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம்.** நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு

அறிகின்றான்.'' (திருக்குர்ஆன்5:9)

இங்கே அல்லாஹ் நீதியின் அந்தஸ்தை ஒரு நம்பிக்கையாளருக்கு உயர்ந்ததாக ஆக்கி வைத்துள்ளான். இது இல்லை என்றால் உங்களிடம் ஈமானே இல்லை. ஒரு சமுதாயத்தின் மீதுள்ள பகைமை கூட உங்களை நீதியின் அந்தஸ்தை விட்டும் கீழே இறக்கிவிடும் அளவுக்கு ஆக்கிவிடக் கூடாது. உங்களின் நீதி, நேர்மையின் முன்மாதிரி இஸ்லாத்தின் அழகிய போதனைக்கு சாட்சியாக இருக்க வேண்டும். இஸ்லாத்தின் போதனையின் மீது எவருடைய விரலும் எழக்கூடாது. பெயரளவிலான இந்த முஸ்லிம்களின் முன்மாதிரி முஸ்லிம் அல்லாதவர்களை இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கின்றதா? என இவர்கள் தம்மைப் பற்றி ஆய்வு செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இவர்கள் வெளிப்படையான கொடுமையும், கொலையும் மட்டும் செய்யவில்லை; மாறாக எதிர்கால தலைமுறைகளையும்நாசமாக்குகின்றார்கள். அவர்களை இஸ்லாத்தை விட்டும் வெகுதூரம் விலக்கிக் கொண்டு செல்கின்றார்கள்.பெயர்தாங்கி ஆலிம்கள் ஜிஹாது, பிரிவினை வாதம் என்ற பெயரில் துவக்கி வைத்துள்ள தீவிரவாத கும்பலின் திசையை சரி செய்து, தமது தலைமுறைக்கு சரியான இஸ்லாத்தின் போதனை வழங்கக் கூடியவர்களாக மாறினால் எவ்வளவு நன்றாக இருக்கும்! மேலும் இந்த தீவிரவாத கும்பலை அடியோடு ஒழிப்பதற்காக உண்மையான இஸ்லாத்தின் ஆயுதத்தைப் பயன்படுத்தட்டும். மேலும் இது, காலத்தின் இமாமின் பேச்சைக் கேட்டு உண்மையான இஸ்லாத்தின்படி தாமும் செயல்பட்டு, மற்றவர்களையும் செயலபட வைக்கும்போதுதான் நடைபெற முடியும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை நேசர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த **மவ்லவிகளை அவர்களின் சீர்திருத்தத்தின் பக்கம் கவனமூட்டியவாறு இவ்வாறு அறிவுரை கூறினார்கள்:**

''இஸ்லாத்தின் மவ்லவிகள் ஒன்று சேர்ந்து அவர்கள், மிருகத்தனமான முஸ்லிம்களின் உள்ளங்களிலிருந்து (தீவிரவாதம்தான் ஜிஹாது என்ற பெயரில் செய்யும்) இந்த தவற்றை நீக்கி விட்டால் சந்தேகமின்றி அவர்கள் சமுதாயத்தின் மீது மாபெரும் நன்மை செய்தவர்கள் ஆவார்கள். அது மட்டுமின்றி, அவர்களின் மூலமாக இஸ்லாத்தின் மேன்மைகளின் பெரும் பகுதி மக்களுக்கு புலப்பட்டு விடும். மார்க்க அளவிலான அந்த மக்கள் தமது தவற்றின் காரணமாக இஸ்லாத்தின் மீது வைத்துள்ள வெறுப்புகள் நீங்கி விடும்.''

ஆக, இதுதான் இஸ்லாத்தின் அழகிய போதனைகளை மக்களுக்குப் பரப்ப வேண்டும் என்பதில் அன்னாருக்கு இருந்த வேதனை! ஆனால் இந்த விஷயத்தைக் கேட்பதற்கு இந்தப் பெயர்தாங்கி ஆலிம்கள் எப்போது ஆயத்தமாக இருக்கிறார்கள்? அவர்களின் நோக்கம் இப்போது இஸ்லாமிய மார்க்கத்தின் தூய்மையை நிலைநாட்டுவதற்கு பதிலாக அரசியல் மற்றும் சொந்த பயனைப் பெறுவதாக ஆகி விட்டது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் என்ற கட்டளையை அவர்கள் எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். அல்லாஹ் ஒவ்வொரு செயலையும், அவன்அறிபவனவான் என்ற அளவில் மட்டும் பதிய வைப்பதில்லை; மாறாக, ஒவ்வொரு செயலும் மனிதனின் பதிவேட்டில் பதியப்பட்டு அதற்கேற்ப தீர்ப்பு வழங்குகின்றான். கொடுமையிழைப்பவர்கள் நிச்சயமாக தமது தீய முடிவை அடைகின்றனர். எனவே நீங்கள் உங்கள் உலகத்தையும்,மறுமையையும் சரியாக்க வேண்டுமென்றால், பகைவர்களுடனும் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள் என்ற அல்லாஹ்வின் கட்டளையை முன்னிறுத்துங்கள். பிறகு கலிமா கூறுபவர்களைப் பற்றி அல்லாஹ், *ருஹமாவு பைனஹும் (அவர்கள் தங்களுக்குள் கருணையுள்ளம் கொண்டவர்கள் 48:30)* எனக் கூறுகின்றான். ஆனால் இவர்களோ நம்மவர்களிடமும் பகைவர்களை விட மிக மோசமான முறையில் நடந்து கொள்வதை நாம் பார்த்து வருகிறோம். இவர்கள், தாம் செய்யும் இந்தக் கொடுமைகளுக்கு பிடிக்கப்படாமல் தப்பி விடலாம் என கருதுகிறார்களா? அவ்வாறன்று; அப்படி ஒருபோதும் நடக்காது. **அல்லாஹ் கூறுகின்றான்:**

''எவர் ஒரு நம்பிக்கையாளரை அறிந்து கொண்டே கொலை செய்வாரோ அவருக்குரிய தண்டனை நரகமாகுஇம். அவர் அதில் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து வருவர். மேலும் அவர்கள் மீது அல்லாஹ்வின் கோபமும் சாபமும் இருக்கும். மேலும் அவருக்காக மாபெரும் தண்டனை உண்டு.'' (திருக்குர்ஆன் 4:94). அடுத்து **அல்லாஹ் கூறுகிறான்:** எவர் உங்களுக்கு சலாம் கூறுகிறாரோ அவரைப் பற்றி நீங்கள் நம்பிக்கை கொண்டவர் இல்லை என்று கூறாதீர்கள்.(4:95)

ஆக, சகோதரத்துவத்திற்கான ஒரு கண்ணியத்தை இஸ்லாம் நிலைநாட்டியுள்ளது. இந்த கண்ணியத்தை ஒருவர் அழிக்கிறார் என்றால், கலிமா சொல்பவரை கொலை செய்கிறார் என்றால் பிறகு அவர் தங்குமிடம் நரகமாகும். மேலும் அவர் அல்லாஹ்வின் சாபத்தின் கீழ் என்றென்றும்

இருப்பார். எவர்கள் தமது ஆலிம்கள் கற்றுக் கொடுத்த போதனையினால் தற்கொலை செய்து, அல்லது (தற்கொலைப் படையில் சேர்ந்து)கொல்லப்பட்டு தம்மை அல்லாஹ்வின் திருப்தியை பெற்று விட்டவர்களாக கருதுகிறார்களோ அப்படிப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு நம்பிக்கையாளரைக் கொன்று நீங்கள் அல்லாஹ்வின் திருப்தியை பெற்றுக் கொள்ள முடியாது; மாறாக, நீங்கள் அல்லாஹ்வின் சாபத்தைப் பெற்றுக் கொள்கிறீர்கள். மேலும் நரகம்தான் உங்கள் தங்குமிடம் என்பதை அல்லாஹ் தெளிவுபடுத்தி விட்டான். ஆனால் இவர்கள் நரகத்தை ஒரு கதையாகக் கருதுகிறார்கள் போலும்! அல்லது அல்லாஹ்வின் இந்த விஷயங்களின் மீது இவர்களுக்கு நம்பிக்கை இல்லை போலும்!! அல்லாஹ்வின் இந்த அளவிலான எச்சரிக்கைகள் இருந்தும் இவர்களுக்கு எந்த தாக்கமும் ஏற்படவில்லை. ஒருவர் மற்றவரின் கழுத்துகளை வெட்டிக் கொண்டே செல்கின்றனர். இவர்களுக்கு மறுமை மீது நம்பிக்கை இல்லையென்றால் இவ்வுலகின் நிலைமை பற்றியும் இறைவன், உங்களுக்கு என்ன முடிவு ஏற்படும் என்பதை விளக்கிக் கூறியிருக்கிறான். மேலும் நீங்கள் ஒரு சகோதரர் இன்னொரு சகோதரரை அழித்தால் பிறகு உங்களுக்குள் இருக்கின்ற அச்ச உணர்வும் இல்லாமற் போய்விடும். எந்த உலகத்திற்காக இவற்றையெல்லாம் நீங்கள் செய்கின்றீகளோ அதுவும் கிடைக்காது. அல்லாஹ் கூறுகிறான்:

‘‘ அல்லாஹ்வுக்கும் தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள். ஒருவருக்கொருவர் சண்டையிடாதீர்கள். இல்லையென்றால் நீங்கள் கோழையாகி விடுவீர்கள். உங்களைப் பற்றிய திகில் உணர்வு சென்றுவிடும். நீங்கள் பொறுமையுடன் செயல்படுங்கள்; அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்.’’ (8:47)

முஸ்லிம்களின் இன்றைய நிலையைப் பார்த்து அல்லாஹ்வின் இந்த விஷயம் அவர்களுக்கு முழுமையாக நிறைவேறுவதைக் காண முடிகிறது. முஸ்லிம்களின் ஆற்றல் நூற்றுக்கு நூறு முடிந்து விட்டது. மேலும் எண்ணற்ற தீவிரவாத அமைப்புகளால் நாடு போர்க் களமாக மாறியிருக்கிறது. மேற்கத்திய ஆற்றல்களுக்கு முன் இவர்கள் கையேந்திக் கொண்டிருக்கின்றனர். (இவர்களிடத்தில்) இறைவனுடைய இடம் வெற்றிடமாக இருக்கிறது. இறைவனை இவர்கள் விட்டு விட்டார்கள். இறைவனை விட்டு விட்டு உலகவாதிகளின் பக்கம் இவர்கள் சாய்ந்திருக்கிறார்கள். அதனையே தமது நிலைத்திருப்பதற்குக் காரணியாகக் கருதுகிறார்கள். முஸ்லிம் நாடுகள் என்றழைக்கப்படும் இவர்களை நாசத்தின் பக்கம் அழைத்துச் செல்லும் எந்தெந்த செயல்களைப் பற்றி எடுத்துக் கூறுவது? ஓர் அநியாயம் நடக்கிறது. சில நாட்கள் வரை அது பற்றி பொது மக்களிடம் சலசலப்பு எற்படுகிறது. கூக்குரலிடுகிறார்கள். பிறகு அதே அநியாயக்காரர்களின் மூலமாக பொது மக்களின் பெரும்பான்மை ஆயுதமாக பயன்படுகிறது. எனவே இறைவனுடைய விஷயத்தை ஏற்றுக் கொள்ளாத வரை- எதிரிகளிடம் கூட நீதியின் அந்தஸ்தை நிலைநாட்டாத வரை- சலாம் கூறுகின்ற ஒவ்வொருவருக்கும் அமைதியை தராத வரை- உங்களுடைய சகோதரத்துவத்தின் அந்தஸ்தை நிலைநாட்டாத வரை- அரசு, மக்களின் உரிமைகளை கவனத்திற் கொள்ளாத வரை-மக்கள் அரசாங்கத்திற்கு கட்டுப்படாத வரை-இறையச்சம் உள்ளத்தில் நிலை பெறாத வரை இந்த மாதிரியான சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்கும். நமது தலைவர்களுக்கும், ஆலிம்கள் என்று அழைப்பவர்களுக்கும், பொது மக்களுக்கும் இந்த விஷயம் புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! முஹம்மதிய்ய உம்மத்திற்கு ஏற்படும் துன்பம் நம்மையும் துன்பத்தில் ஆழ்த்துகிறது. **நமக்கு நமது இமாம் (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்கள்** நம் எஜமானரும் நாம் கட்டுப்படத் தகுந்தவராகவும் இருக்கின்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவராக இருக்கின்றவர்களுக்கு அன்பும், அநுதாபமும் காட்டும் முறையைக் கற்றுத் தந்தார்கள். அவர்கள் ஒரு **பாரசீக கவிதையில் இவ்வாறு கூறுகிறார்கள்:**

**‘‘உள்ளமே! நீ இந்த உம்மத்தைச் சேர்ந்த மக்களை கவனத்தில் வைத்துக் கொள். அவர்கள் மீது அநுதாபப் பார்வை செலுத்துவாயாக. ஏனெனில் இவர்கள் கடைசியில் எனது எஜமானரின் உம்மத்தைச் சேர்ந்தவர்கள் என வாதிடுபவர்கள் ஆவர்.’’**

இவர்கள் நம்முடன் அநீதியாக நடந்து கொண்டாலும் நமக்கு இவர்கள் மீது வருத்தம் ஏற்படுகிறது. நாம் பழிவாங்குவதில்லை;மாறாக, அவர்களுக்காக துஆ செய்கிறோம். அநுதாபம், நன்மையை நாடுதல் ஆகிய பண்புகளை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்தான் நம்மிடம் உருவாக்கினார்கள். அன்னார் இஸ்லாமிய போதனைக்கேற்ப அநுதாபத்தின் உணர்வை நம்மிடமும் அந்நியரிமும் அனைவரிடமும் பரப்புமாறு நமக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். **அன்னார் கூறினார்கள்:**

‘‘இறைவனுடன் உண்மையான அன்பை நிலைநாட்ட வேண்டும்; மனித குலம், சகோதரர்களின்

உரிமைகள் மற்றும் அன்பில் ஒரு சிறப்பான தன்மையை உருவாக்க வேண்டும் என்பதே எல்லா நபிமார்களுடைய தோற்றத்தின் ஒட்டு மொத்தமான நோக்கமாக இருந்திருக்கிறது. இது இல்லாத வரை மற்றெல்லா விஷயங்களும் சம்பிரதாயங்களாகும்.''

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்னோரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:**

''அவனுடைய அடியார்களின் மீது அநுதாபம் காட்டுங்கள். அவர்கள் மீது வாயினாலோ, கையினாலோ அல்லது வேறு எந்த திட்டத்தினாலும் அநீதி இழைக்காதீர்கள். படைப்பினங்களின் நன்மைக்காக முயற்சி செய்து கொண்டிருங்கள். எவர் மீதும் ஆணவம் கொள்ளாதீர்கள்-அவர் உங்களின் கீழ் வேலை செய்பவராயினும் சரியே. எவரையும் ஏசாதீர்கள்-அவர் ஏசினாலும் சரியே. ஏழ்மையாகவும், சகிப்புத் தன்மை கொண்டவராகவும், நல்ல எண்ணம் கொண்டவராகவும்,அநுதாபம் காட்டுபவராகவும் மாறுங்கள். அப்போதுதான் நீங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவீர்கள்.''

**இன்னோரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:**

''இறைவன் உங்களிடம் எதிர்பார்ப்பது என்ன? நீங்கள் எல்லா மனித குலத்துடனும் அநுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதைத்தான். அதை விட அதிகமாக, (இறைவன் உங்களிடம் எதிர்பார்ப்பது) உங்களுக்கு எந்த நன்மையும் செய்யாதவருக்கும் நன்மை செய்யுங்கள். அதை விடவும் மேலாக, தாய்மார்கள் தம் பிள்ளைகளுடன் நடந்து கொள்வது போன்று எல்லா இறை படைப்பினங்களுடனும் அநுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள். நன்மைகளின் இறுதி எல்லை தாயைப் போன்ற இயல்பான ஆர்வமாகும்.''

ஓர் அஹ்மதி இத்தகைய உணர்வுகளைக் கொண்டவராக இருக்க வேண்டும். பாகிஸ்தானில் நடந்த இந்த கொடுமை நிச்சயமாக நம்மை மிகவும் துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது. மேலும் முஸ்லிம் நாடுகளில் என்ன கொடுமை நடந்தாலும் அது நமது துக்கத்திற்குக் காரணமாக இருக்கிறது. மேலும் இந்தக் கொடுமைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக இறைவன் தனது வாக்குறுதிக்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பி விட்டான். அவர் போர்களையும் சண்டைகளையும் நிறுத்துவதற்காக வரவிருந்தார் என நாம் உலகிற்கு கூக்குரலிட்டுக் கூறிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் இப்படிப்பட்ட துன்பத்தைப் பற்றிய உணர்வு மேலும் அதிகமாகி விடுகிறது. ஆனால் இந்த அழைப்பு இருந்தும் நமது எதிரிகள் நம்மை எதிர்ப்பதில் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை ஏற்படும்போது பின்னர் நீதி, அநுதாபம் ஆகியவை முடிந்து விடுகிறது. இதன் விளைவாக எல்லா சமூகத்திலும் குழப்பமும் சோதனையும்தான் தென்படுகிறது. அப்பாவிகளின் இரத்தம் சிந்தப்படுகிறது. இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. முஸ்லிம் ஆலிம்கள் என்று அழைக்கப்படுபவர்கள் இதனை உணர்ந்து, முஹம்மதிய்ய உம்மத்தை பிரிவினை வாதத்தில் ஆழ்த்தி நாசமாக்க முயற்சி செய்வதற்கு பதிலாக இஸ்லாத்தின் அமைதி, அன்பு, நேசம் ஆகியவற்றின் போதனையை முஸ்லிம்களிடம் உருவாக்கினால் எவ்வளவு நன்றாக இருக்கும்! மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதைப் போன்று, இஸ்லாம் தீவிரவாதம் மற்றும் வாளின் மார்க்கமாகும் என்ற இஸ்லாத்தின் மீதான தவறான எண்ணத்தை முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்தும் களைய வேண்டும். அல்லாஹ் இந்த அறிவை இவர்களுக்கு வழங்குவானாக. அல்லாஹ் இந்த நாடுகளில் அமைதியை நிலைநாட்டுவானாக. அரசாங்கங்களும், பொது மக்களும் உண்மையான இஸ்லாமிய கண்ணியத்தை நிலைநாட்டுபவர்களாக மாறட்டுமாக. அல்லாஹ் நமக்கும் இதன் உயர்ந்த தகுதியை நிலைநாட்டும் நல்வாய்ப்பை வழங்குவானாக. சிரியா, ஈராக், லிபியா ஆகிய நாடுகளில் வாழும் அஹ்மதிகள் ஒன்று, நாட்டினர் என்ற முறையில் பின்னர் அஹ்மதி என்ற முறையில் துன்பத்தில் இருக்கின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு அந்த கஷ்டங்களிலிருந்து அவர்களை விடுவிப்பானாக.இரு பிரிவினரும் அஹ்மதிகளுக்குஎதிராகி விட்டனர். மிகவும் கடினமான நிலையில் வானத்தில் கீழ் அவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் எந்த உதவியும் அவர்களுக்கு சென்றடைய முடியாது. அல்லாஹ்தான் அருள் செய்ய வேண்டும். கருணை புரிய வேண்டும். இந்த கஷ்டமான நாட்களிலிருந்து சீக்கிரம் அல்லாஹ் அவர்களை வெளியேற்றுவானாக.

**Published By: Nazarath Nashr-O- Isha'ath, Qadian**

**Translated By:** ***O.M. Muzzammil Ahmad*** **For Tamil Desk**